DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 3 of 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW- 11** |
| **Name** | **:** | நிஷாந்த் |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**29.1.2025**

**விசாரணை :**

நான் மஞ்சனக்கொரையில் குடியிருக்கிறேன். ஆட்டோ ஓட்டுகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 1ஆம் எதிரி ரங்கசாமி, 2ஆம் எதிரி ஹரிஸ்குமார் மற்றும் 4ஆம் எதிரி நாகராஜ் ஆகியோரையும், 4ஆம் எதிரியின் தந்தையான இறந்துபோன 3ஆம் எதிரி கனகராஜையும் தெரியும்.

எனக்கு அ.சா.1 பால்துரையும், அ.சா.2 தமிழ்செல்வியையும் தெரியும், நாங்கள் எல்லோரும் மஞ்சனக்கொரையில் குடியிருப்பதால் அவர்களை தெரியும், நல்ல பழக்க வழக்கம் உண்டு. எனக்கு 1ஆம் எதிரி ரங்கசாமிக்கும், அவருடைய

மருமகனான அ.சா.1 பால்துரைக்கும் சண்டை ஏற்பட்டது என்பது நான் ஆட்டோ எடுக்க போகும்போது எனக்கு தெரியவந்தது. 3.10.2017ஆம் தேதி போலிசார் சம்பவ இடமான 1ஆம் எதிரி ரங்கசாமி வீட்டு அருகே வந்து விசாரித்து கொண்டு இருந்தார்கள், நான் அப்போது அங்கு நின்று கொண்டிருந்தேன், அப்போது போலிசார் அங்கு வரைபடம் போட்டார்கள், போலிசார் எழுதியதில் நானும், பாபுவும் கையொப்பம் போட்டோம். பார்வை மகசரில் இருக்கும் சாட்சியின் கையொப்பம் மட்டும் Exhibit P11 ஆக குறிக்கப்படுகிறது. போலிசார் அந்த இடத்தை வந்து பார்த்ததற்குதான் நான் Exhibit P11 கையொப்பத்தை போட்டேன். அன்று போலிசார் 4ஆம் எதிரி நாகராஜையும், அவர் அப்பாவான இறந்துபோன 3ஆம் எதிரி கனகராஜையும் டீக்கடையில் வைத்து கைது செய்தார்கள். போலிசார் 4ஆம் எதிரி நாகராஜிடமும், அவர் அப்பாவான இறந்துபோன 3ஆம் எதிரி கனகராஜிடமும் எழுதி வாங்கினார்கள், போலிசார் 4ஆம் எதிரியிடமும், 3ஆம் எதிரியிடமும் என்ன என்று கேட்டார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் இறந்துபோன 3ஆம் எதிரி கனகராஜின் ஒப்புதல் வாக்குமூலத்தில் இருக்கும் 2வது கையொப்பம் என்னுடையதுதான், அந்த கையொப்பம் தான் Exhibit P12. அதன்பிறகு போலிசார் 3ஆம் மற்றும் 4ஆம் எதிரியை கூட்டிக்கொண்டு போய்விட்டார்கள், போலிசாரிடம் 3 மற்றும் 4ஆம் எதிரிகள் எதுவும் எடுத்து கொடுக்கவில்லை. என்னிடம்

காண்பிக்கப்படும் 3.10.2017ஆம் தேதி 17.30 மணிக்கு தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகசரில் இருக்கும் 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் Exhibit P13. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி நீதிமன்றம் அனுமதித்தபிறகு அரசு தரப்பு குறுக்கு விசாரணை**:

3.10.2017ஆம் தேதி போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்று சொன்னால், ஆமாம். என்னிடம் காண்பிக்கப்படும் அந்த பார்வை மகசர்தான் Exhibit P14. அந்த பார்வை மகசரில் நானும், என் நண்பர் பாபுவும் கையொப்பம் போட்டோம் என்று சொன்னால், ஆமாம். அதன்பிறகு 3.10.2017ஆம் தேதி மாலை 16.30 மணிக்கு போலிசார் மஞ்சனக்கொரை டீக்கடையில் வைத்து இறந்துபோன 3ஆம் எதிரி கனகராஜையும், அவர் மகனான 4ஆம் எதிரி நாகராஜையும் கைது செய்தார்கள் என்று சொன்னால், ஆமாம். அதன்பிறகு போலிசார் 3ஆம் எதிரி கனகராஜிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார்கள் என்று சொன்னால், ஆமாம், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 3ஆம் எதிரி கனகராஜூம், நானும் என் நண்பர் பாபுவும் கையொப்பம் போட்டுள்ளோம். அதன்பிறகு 3ஆம் எதிரி கனகராஜ் போலிசாரை ஒரு புதருக்கு அழைத்துச்சென்று கோடாலி, இரும்பு பைப் மற்றும் வெட்டு கத்தியை எடுத்து கொடுத்தார் என்று சொன்னால், சரியில்லை. 3ஆம் எதிரி

கனகராஜ் போலிசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த பிறகு, போலிசாரை ஒரு புதருக்கு அழைத்து சென்று கோடாலி, இரும்பு பைப் மற்றும் வெட்டு கத்தியை எடுத்து கொடுத்தார் அதை போலிசார் மகசரில் எங்கள் முன்னிரையில் கைப்பற்றினார்கள் என்றும், நான் போசலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது 1,2 மற்றும் 4ஆம் எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள், எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

<u>1,2 மற்றும் 4ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>:

போலிசார் 3ஆம் எதிரி கனகராஜ் மற்றும் 4ஆம் எதிரி நாகராஜிடம் எழுதி வாங்கிய பேப்பரில் என்னிடம் கையொப்பம் வாங்கவில்லை என்று சொன்னால், சரியில்லை கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் 3ஆம் எதிரி கனகராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் டைப் அடிக்கப்பட்ட பேப்பர் என்றும், எழுதி வாங்கப்பட்ட பேப்பர் இல்லை என்றும் சொன்னால், ஆமாம். என்னிடம் காண்பிக்கப்படும் 3ஆம் எதிரி கனகராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூல பேப்பரை போலிசார் தயாரித்து எடுத்து வந்து டீக்கடை அருகே என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள், அது தான் உண்மை என்று சொன்னால், போலிசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் சொன்ன தேதியில், சொன்ன இடத்திற்கு, சொன்ன நேரத்தில் போலிசார்

வரவே இல்லை என்றும், போலிசார் காவல் நிலையத்தில் வைத்துதான் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், சொன்னால், சரியில்லை போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள்.

N.
MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.01.29 03:44:23 +0530